கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் மற்றும் மோட்டார் வாகன தீர்ப்பாயம்,
பெரியகுளம்

எ.ம.சா. 1 நாள் 05.02.2025

வழக்கு எண் **MCOP No. 25 /2023**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அரியநாச்சி | ஊர் | : | தேனி |
| தகப்பனார் பெயர் | : | கருப்பையா | தாலுகா | : | தேனி |
| தொழில் | : | இளநிலை உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், தேனி | வயது | : | 58/2025 |

ஆணையுறுதி சட்டப்படி, சாட்சி பிரமாணம் செய்யப்பட்டார். 1908ம் ஆண்டு, சிவில் நடைமுறைச் சட்டம் பிரிவு கட்டளை XVIII விதி 4ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

**எதிர்மனுதாரர் தரப்பில் 1ம் சாட்சி முதல் விசாரணை**

நான், தேனி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியாற்றி வருகிறேன். நான் நீதிமன்ற அழைப்பாணையின்பேரில் சாட்சியமளிக்க வந்துள்ளேன். எனக்கு நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க அதிகாரம் அளித்து **தேனி வட்டார போக்குவரத்து அலுவலர், வழங்கிய அதிகார கடிதம் எமசாஆ 1** ஆகும். இந்த விபத்தில் இறந்த பர்மாதுரை மகன் சதீஸ்குமார் என்பவருக்கு எங்கள் தேனி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம் எதுவும் வழங்கப்படவில்லை, மேலும் ராமர் மகன் பெருமாள் என்பவருக்கு இலகுரக வாகனம் ஓட்டுவதற்கு 07.10.2005 முதல் 06.10.2025 வரையிலும் மற்றும் கனரக வாகனம் ஓட்டுவதற்கு 10.02.2020 முதல்

09.02.2025 வரையிலும் ஓட்டுநர் உரிமம் இருந்து வந்தது. விபத்து தேதியான 22.04.2022 தேதியில் பெருமாளுக்கு ஓட்டுநர் உரிமம் ஊர்ஜித்தில் இருந்தது, **பெருமாளின் Driving Licence Computer Extract எமசாஆ** 2 ஆகும். பெருமாள் ஓட்டிச் சென்ற T**N-32-AF-5008 காரின் Registration Certificate-ன் கணினி நகல் எமசாஆ** 3. மேற்படி **காரின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை எமசாஆ** 4. மேற்படி **காரின் இன்சூரன்ஸ் நகல் எமசாஆ** 5. மேற்படி காரின் **Fitness Certificate-ன் கணினி நகல் எமசாஆ** 6. மேற்படி **காரின் பெர்மிட்டின் கணினி நகல் எமசாஆ** 7. விபத்தில் சம்பந்தப்பட்ட **TN-59-AB-5643 பதிவு எண் கொண்ட இரு சக்கர வாகனத்தின் ஆர்.சி. நகல் எமசாஆ** 8. மேற்படி **இரு சக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை எமசாஆ** 9. விபத்தில் இறந்த பர்மாதுரை மகன் சதீஸ்குமார் என்பவருக்கு எங்கள் தேனி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் **ஓட்டுநர் உரிமம் எதுவும் வழங்கப்படவில்லை என்பதை காட்டுவதற்கான தேனி வட்டார போக்குவரத்து அலுவலரின் அறிக்கை எமசாஆ 10** ஆகும். எமசாஆ 9 இரு சக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் காலம் 12 ல் Front Wheel Damaged, Fork Bend என்று போடப்பட்டுள்ளது. எமசாஆ 4 காரின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் Front Bumper Damaged, Head Light Assembly Damaged என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் ஆவணத்தின் அடிப்படையில்தான் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரிதான். நான் ஆவணத்தை சரியாக பரிசோதனை செய்யாமல் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் இறந்த சதீஸ்குமார் வேறு வட்டார போக்குவரத்து

அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம் எடுத்திருந்தால் எங்கள் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தெரிய வராது என்றால் சரிதான். நான் கோப்புகளை சரியாக ஆராயாமல் தவறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u> – இல்லை.**

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே , என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

(ஒம்/- S.சமீனா)
05.02.2025
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.